


திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மண்டலப் பொறுப்பாளர், உணவு மற்றும் உணவு பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினர். இதில் மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராம கிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூரியூர் ஊராட்சி சின்ன சூரியூர் கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி புதிதாக கட்டி முடிக்கப்பட்ட ரூ.52 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டிலான வகுப்பறை கட்டிடங்களை மாணவர்களின் பயன்பாட்டிற்காக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். மேலும் இதே போல் கீழ முல்லக்குடி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட அரசு நடுநிலைப் பள்ளியில் ரூ.52 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டிலான கட்டி முடிக்கப்பட்ட புதிய வகுப்பறைகளை பள்ளிக் குழந்தைகளின் பயன்பாட்டிற்காக தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திறந்து வைத்தார். மேலும் இந்நிகழ்வில் திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாநிதி, தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன், திருவெறும்பூர் தாசில்தார் கார்த்திகேயன் உட்பட மாவட்ட கல்வி அலுவலர், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமை!

## ‘தமிழ்நாடு தலைகுனியாது’ அம்பாசமுத்திரம் தொகுதி தேர்தல் பிரச்சார ஆலோசனைக் கூட்டம்!

### ஆ.பிரபாகரன் வரவேற்பு! முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரை!

நெல்லை,மார்ச் 20–

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் அம்பாசமுத்திரம் தொகுதி சார்பில் வீரவநல்லூர் எஸ்.எல்.எம்.மஹாலில் தேர்தல் பிரச்சார ஆலோசனைக் கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் ஒன்றியச் செயலாளர்கள் பரணி சேகர், ஜெகன், முத்துப் பாண்டி என்ற பிரபு, முத்து கிருஷ்ணன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் வரவேற்புரையாற்றினார். வி.கே.புரம் நகரச் செயலாளர் கணேசன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் பங்கேற்று பேசியதாவது.

தி.மு.க. இயக்கத்தில் சாதி, மதம் இல்லை. தமிழகத்தில் மிகப்பெரிய சோதனைகள் இடர்பாடுகள், சுனாமி பூகம்பம் ஏற்பட்டாலும் கூட ஒன்றிய அரசு அச்சுறுத்தியும் கூட தி.மு.க. ஆட்சியை சிறப்பாக வழிநடத்தும் போர் படையாக கழக தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்கள் செயல்படுகிறார். சட்டமன்றத்தில் உச்சபட்ச பதவி சபாநாயகர் பதவி தான். அந்த சபாநாயகர் பதவியில் இருந்த ஆவுடையப்பன் மாவட்ட செயலாளராக இருக்கிறார். என்றால் அது தான் உணர்வு. சட்டமன்றத் தேர்தலுக்கு இரண்டு ஆண்டுக்கு முன்பே கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றியிருக்கிறீர்கள். நாளை தேர்தல் வந்தால் கூட வெற்றி கனியை முதல்வர் தளபதி அவர்கள் கையில் கொடுக்கத் தாயாராக இருக்குறீர்கள்.

ஐந்தாண்டு மக்களுக்கு தேவையான திட்டங்களை முதல்வர் அவர்கள் செயல்படுத்தியிருக்கிறார் கள்.100 ஆண்டுக்கு பின் நம் எதிர்கால சந்ததியினர் பயன்பெறும் வகையில் திட்டங்களை தி.மு.க அரசு செயல்படுத்தி வருகிறது. ஒன்றிய அரசு மூலம் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் நிதி பகிர்மானம் செய்யப்படுகிறது. மாநில மக்கள் தொகை அவர்களின் தரம் ஆகியவற்றை பார்த்து நிதி பகிர்வு வரையறுக்கப்படும். அப்படி வரையறை செய்த்தில் மூன்றாண்டுகளில் நமக்கு 40 சதவீதம் நிதி பகிர்வு வர வேண்டும். ஆனால் வெறும் 4 சதவீதம் தான் வந்துள்ளது. இதை முதல்வர் அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் ஒன்றிய அரசு கவனத்துக்கு எடுத்து சென்றும் நிதி வந்தபாடில்லை. ஒன்றிய அரசுக்கு அதிக வரி செலுத்தும் இரண்டு மாநிலங்கள் தமிழ்நாடும், மாகராஷ்டிராவும் தான். நம் உழைப்பு மூல அந்த வரி அங்கு செல்கிறது. நிதி பகிர்விர் ஓர வஞ்சசனை செய்து நெருக்கடி கொடுத்து அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தி அதன் மூலம் லாபம் அடையலாம் என எடப்பாடி பழனிச்சாமி நமக்கு வர வேண்டிய நிதியை ஒன்றிய அரசிடம் கூறி தடுக்கிறார். அ.தி.மு.க.வை படுகுழியில் தள்ளி மீள முடியாத நிலைக்கு கொண்டு சென்றவர் எடப்பாடி, நன்றி கெட்டவர். விபத்து மூலம் சசிகலா எடப்பாடி பழனிச்சாமியை முதல்வராக நியமித்தார். அவருக்கே நன்றி இல்லாமல் இருந்து விட்டார்.

சட்டமன்றத்தில் எடப்பாடி மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்த போது எனது ஆதரவில் இருந்த 11 எம்.எல்.ஏ.க்கள் அளித்த ஆதரவால் தான் அன்று அ.தி.மு.க. அரசு தப்பியது. அதனால் நான்கரை ஆண்டு இ.பி.எஸ். ஆட்சி செய்தார். நான் எதிர்த்து இருந்தால் அன்று ஆட்சி கவிழ்ந்திருக்கும்.

அரசியல் ரீதியாக நான் செய்த தவறு எடப்பாடி பழனிச்சாமிக்கு ஆதரவு அளித்தது தான். நான் செய்த பெரிய தவறு அவரை காப்பாற்றியது தான். அதற்காக அ.தி.மு.க. தொண்டர் களிடம் நான் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன். அப்படி ஒரு மோசமான ஆளு எடப்பாடி.

நான் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டது எனது பெயரில் ஆறு பேரை நிறுத்தினார் உதயகுமார் ஆனால் அந்த ஆறு பேரும் அ.தி.மு.க. வேட்பாளரும் டெபாசிம் இழந்தார்கள்.

ஜெயலலிதா தந்த திட்டங்களை எல்லாம் 2019 ல் எடப்பாடி நிறுத்திவிட்டார். தற்போது படித்த மாணவர்கள் நம் மாவட்டத்திலையே வேலை வாய்ப்பு பெறும் ஆரோக்கியமான சூழல் ஏற்பட்டுள்ளது. ஒன்றிய அரசு நிதி தர மறுத்தும் பொருளாதாரத்தில் தமிழகம் 11.08 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளது. ஒன்றிய அரசே 9 சதவீதத்துக்கு கீழ் தான் வளர்ச்சி பெற்றுள்ளார்கள். நம்மை மற்ற மாநிலங்கள் வியந்து பார்க்கிறார்கள். மீண்டு மக்கள் தளபதி அவர்கள் ஆட்சி தொடர தீர்ப்பெழுதி விட்டார்கள். ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்றார்.

இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

கூட்டத்தில் முன்னாள் எம்.பி.க்கள் ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ. அய்யப்பன், மாநில விவசாயத் தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மைக்கேல், தமயந்தி, தமிழ்ச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் கணேசன், ரவிச்சந்திரன், கதிர்வேல் முருகன், பேரூர் செயாலளர்கள் இசக்கி பாண்டியன், முத்து கணேசன், மனிஷா செல்வராஜ், சிந்தாமதார், மணிகண்டன், டி.வானுவாமலை,

மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் அருண் தவசு பாண்டியன், சாலமோன் டேவிட் உள்பட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் வீரவநல்லூர் பேரூர் செயலாளர் சுப்பையா நன்றி உரையாற்றினார்.

### நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமை!

## நாங்குநேரி தொகுதியில் ‘தமிழ்நாடு தலைகுனியாது’ ஆலோசனைக் கூட்டம்!

### ஜோசப்பெல்சி வரவேற்பு! முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரை!

நெல்லை, மார்ச் 20–

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம் மற்றும் தேர்தல் பிரச்சாரம் தொடர்பான கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் மா. கிரகாம் பெல் தலைமையில் மாவட்டப் பொறுப்பு குழு உறுப்பினர் ஜார்ஜ் கோசல், நம்பி,ஹரி கிருஷ்ணன்,சந்திரன் அனுராதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இராதாபுரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜோசப்பெல்சி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் பங்கேற்று பேசியதாவது.

சட்டமன்றத் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டு விட்ட நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தேர்தல் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து வரும் கட்சித் தொண்டர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் எனது பாராட்டுகள். கழக தலைவரும், முதலமைச்சருமான தளபதி அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் தேவைகளை அறிந்து மிகச் சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. நாம் செலுத்தும் வரியில் 40 சதவீத நிதியை ஒன்றிய அரசிடம் திருப்பிக் கேட்டால், வெறும் 4 சதவீதம் மட்டுமே நமக்குக் கிடைக்கிறது.

இவ்வாறு ஒன்றிய அரசு நிதியைத் தர மறுத்தாலும், மாநில அரசின் சொந்த நிதியைக் கொண்டு புதிய திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை தமிழகம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் மூலம் ஈர்க்கப்பட்ட முதலீடுகளால், தென் மாவட்டங்களான மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பல புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு, லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் 11.5 சதவீத வளர்ச்சியுடன் முதலிடத்தில் இருப்பதே இதற்குச் சான்று. கடந்த எடப்பாடி பழனிசாமி ஆட்சியில், ஏழை மாணவர்களுக்காகப் ஜெயலலிதா அவர்கள் கொண்டு வந்த ‘விலையில்லா மடிக்கணினி, தாலிக்கு தங்கம் திட்டம் போன்ற திட்டங்களை 2019 ம் ஆண்டே அத்திட்டங்களை எடப்பாடி பழனிசாமி அரசு நிறுத்தி, மாணவர்களுக்கு, பெண்களுக்கு பெரும் துரோகம் செய்தார். தன்னை முதலமைச்சர் இருக்கையில் அமரவைத்தவர்களுக்கே மாபெரும் துரோகம் செய்தவர் எடப்பாடி பழனிசாமி. அந்தப் பாவத்தின் விளைவாகவே மக்கள் அவரைத் தொடர்ந்து தண்டித்து வருகின்றனர். அவர் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து தற்போது வரை நடந்த நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சித் தேர்தல்கள் என தொடர்ச்சியாக 11 தேர்தல்களில் அவர் தலைமையிலான கட்சி படுதோல்வியைச் சந்தித்துள்ளது. அ.தி.மு.க.வை எடப்பாடியும், உதயகுமாரும் அதளபாதாளத்தில் தள்ளி அழித்து வருகின்றனர்.

ஒரு முதலமைச்சர் எப்படி மக்கள் நலன் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதற்குப் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோர் உதாரணமாகத் திகழ்ந்தனர். இன்று அதே வழியில், மக்களின் நாடித் துடிப்பை அறிந்து, வாக்குறுதிகளை நிறைவேற்றி, மக்களின் முகத்தைப் பார்த்து ஆட்சி செய்யும் முதலமைச்சராக தளபதி அவர்கள் உள்ளார். நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு எவ்வித நிபந்தனையும் இல்லாமல், கொள்கை அடிப்படையில் முழுமையான ஆதரவை அளித்துள்ளோம். தங்களது பலத்தை நிரூபிக்கும் வகையில் திருச்சியில் ஒரு பிரம்மாண்டமான மாநாட்டை கழகத் தலைவர் தளபதி அவர்கள் நடத்தினார்கள். உலகமே வியக்கும் வகையில் அமைந்த அந்த மாநாடு, இருந்தது. அது தொண்டர்களின் எழுச்சியைக் காட்டியது. வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலிலும் மாபெரும் வெற்றி பெற வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று, முதலமைச்சர் தளபதி அவர்கள் மீண்டும் இரண்டாவது முறையாக முதலமைச்சர் அரியணையில் அமர்வது உறுதி, ஒன்றிய அரசின் அச்சுறுத்தலுக்கு ஒரு போதும் தமிழ்நாடு தலைகுனியாது என்றார்.

இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ. அய்யப்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவஜயப்பன், கனகராஜ், சாந்தி சுபாஷ் ஒன்றிய செயலாளர்கள் போர்வெல் கணேசன், கண்ணன், பி.சி.ராஜன் செல்வ கருணாநிதி, சுடலைக் கண்ணு, ராஜா ஞானதிரவியம், நகர செயலாளர் மணி சூரியன்,

பேரூர் செயலாளர்கள் முருகையா பாண்டியன் சேதுராமலிங்கம் உள்பட கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் நெல்லை கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அழகுமுத்து நன்றியுரையாற்றினார்.

### ஈரோடு வடக்கு மாவட்டம் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில்

## BLA 2 ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை!

ஈரோடு, மார்ச் 20–

நம்பியூர் கிழக்கு ஒன்றியம் நம்பியூர் பேரூராட்சிக்கு 20.3.2026 மாலை 4 மணிக்கு நம்பியூர் மேற்கு ஒன்றிய அலுவலகம் நம்பியூரிலும், நம்பியூர் கிழக்கு ஒன்றியம் எலத்தூர் பேரூராட்சிக்கு இன்று (20.3.2026) மாலை 5 மணிக்கு நம்பியூர் மேற்கு ஒன்றிய அலுவலகம், நம்பியூரிலும், புளியம்பட்டி நகராட்சிக்கு 20.3.2026 மாலை 6.00 மணிக்கு நகர அலுவலகம், புளியம்பட்டியிலும், பவானிசாகர் தெற்கு ஒன்றியம் 21.3.2026 காலை 9 மணிக்கு தினேஷ் தோட்டம் பொன்னம்பாளையம், நல்லூரிலும், பவானிசாகர் வடக்கு ஒன்றியம் பவானிசாகர் பேரூராட்சிக்கு 21.3.2026 காலை 10 மணிக்கு பவானிசாகர் பேரூர் கழக அலுவலகம், பவானி சாகரிலும், சத்தியமங்கலம் நகராட்சிக்கு 21.3.2026 பகல் 12 மணிக்கு புளியங் கோம்பு ரோடு, மொண்டிகரடு, சக்தியிலும், சக்தி வடக்கு ஒன்றியம் கே.என். பாளையம் பேரூராட்சிக்கு 21.3.2026 மாலை 5 மணிக்கு புகையிலை குடோன், சிக்கரசம்பாளையத்திலும்,

சக்தி தெற்கு ஒன்றியம் அரியப்பம்பாளையம் பேரூராட்சிக்கு 21.3.2026 மாலை 6 மணிக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வீட்டிற்கு எதிரில், பூ மார்க்கெட், சக்தியிலும்,

டி.என்.பாளையம் தெற்கு ஒன்றியம், பெரிய கொடிவேரி பேரூராட்சி, காசிபாளையம் பேரூராட்சிக்கு 22.3.2026 காலை 9 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் இல்லம், கொங்கர் பாளையத்திலும், டி.என்.பாளையம் வடக்கு ஒன்றியம் வாணிபுத்தூர் பேரூராட்சிக்கு 22.3.2026 காலை 10 மணிக்கு ஒன்றிய கழக அலுவலகம் கள்ளிப்பட்டியிலும் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியில் பி.எல்.ஏ. 2 வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.




விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் நடந்த புனித ரமலான் சமூக நல்லிணக்க இஃப்தார்நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் அ.தி.மு.க. நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில்

## புனித ரமலான் சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

### விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, மார்ச் 20–

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புனித ரமலான் சமூகநல்லிணக்க இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்டார ஜமாத் தலைவர் சையத் அப்துல் மஜித் பாபு தலைமை தாங்கினார். பாலகணேஷ் ஐயர், திருமுருகன் அடிகளார், கன்மலை கிருத்துவ ஆலயத்தின் அருள் தந்தை ஜான் சக்தி கிருபை நாதன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் அனைவரையும் வரவேற்றார்.

விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு புனித ரமலான் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ்ச்செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றியச் செயலாளர்கள் அண்ணாதுரை, மொடையூர் துரை, பச்சையப்பன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்டக் கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்தீபன், செல்வி ராமசரவணன், அன்புசெழியன், பேரூர் செயலாளர் கார்த்திக், விழுப்புரம் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரங்க பூபதி, கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி மாதவன், தே.மு.தி.க. மாவட்டப் பொருளாளர் தயாநிதி, வி.சி.க. ராஜாராமன், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், வர்தகர் சங்கத் தலைவர் செல்வராஜ், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள், அனைத்து தோழமைக் கட்சி நிர்வாகிகள்கலந்து கொண்டனர்.

முகமது அஷ்ரப் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நகர விவசாய அணி அமைப்பாளர் ஜான்பாஷா நன்றி கூறினார்.



தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம்,கோட்டூர் கிராமத்தில் ரூ18.51 லட்சம் மதிப்பீட்டில் 30,000 லி கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் மும்மூர்த்தி, ராதாகிருஷ்ணன், செல்வராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.